Registered as a Newspaper

பெண்மைக்குமெருகேற்றும்
இளமைக்கு எழிலூட்டும்
தரமான
தங்க நகைகளை
அளிப்பவர்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்நகர்.
தொலைபேசி: 23628

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

அழகிய கலைநயம் மிக்க
புதுமையான
22 KT
தங்க நகைகளை
ஆடர் செய்து
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
தொலைபேசி: 23628

கடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஹூ தை மீ 15 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமாதி அவ் பிறை 27 (28-01-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 53

# ★ தொலைபேசி ★ எரிபொருள் தடைகளை நீக்குமாறு இந்தியா வற்புறுத்து

## இலங்கைத் தூதுவருடன் இணை அமைச்சர்கள் சந்திப்பு

புதுடில்லி, ஜனவரி, 27

இலங்கை அரசாங்கம் வடபகுதி மக்கள் மீது விடுத்துள்ள இரண்டு பொருளாதாரத் தடைகளையும் நீக்க வேண்டியது அவசியம் என இந்தியா வலியுறுத்தி இருப்பதாக அறியவந்துள்ளது.

புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதுவர் திரு. பேர்ணுட் திலகரத்தின இணை அமைச்சர்கள் திரு. நட்வர் சிங், திரு. ப. சிதம்பரம ஆகியோரை நேற்றுச் சந்தித்துப் பேசினர்.

அப்போது எரிபொருள் தடை, தொலைபேசித் துண்டிப்பு ஆகியவற்றை நீக்குவதன் மூலம் பேச்சுக்களை சுமுகமாகத் தொடர்வதற்கு வழி ஏற்படும் என்று இந்திய அமைச்சர்கள் வலியுறுத்தினர்கள் என்று அரசுடன் தொடர்புடைய நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவித்தன.

இனப்பிரச்சினை குறித்து விரிவாக இச்சந்திப்பின்போது ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இனப்பிரச்சினைக்கு விரைவாகத் தீர்வு காணப்பட வேண்டும் என்று இலங்கைத் தூதருக்கு இணை அமைச்சர்கள் தெரிவித்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது

ஓரிரு தினங்களில் இலங்கைத் தூதர் பேர்ணுட் திலகரத்தின கொழும்பு திரும்புவார் என்று புதுடில்லியில் தெரிவிக்கப்பட்டது.

(அ-எ)

## ஷெல் தாக்குதலால் கீரிமலையில் பதற்றம்

காங்கேசன்துறை, ஜன, 28

திங்கட்கிழமை இரவு ஒருமணியளவில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களைத் தொடர்ந்து கீரிமலைப்பகுதி மக்கள் பெரும் பதற்றம் அடைந்தனர்.

கீரிமலை, கலட்டி, மாவிட்டபுரம் பகுதிகளிலுள்ள பலர் தமது வீடுகளை விட்டு வெளியேறி உள்ளனர்.

இராணுவத்தினர் திங்கள் இரவு ஹாபர்வியூ ஹோட்டலிலிருந்து குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல்தாக்குதல்களை மேற்கொண்டனர்.

குண்டு வெடிப்பின் எதிரொலி

## தமிழ் தம்பதியினர் பதுளையில் கைது

கொழும்பு, ஜன. 28

பதுளை குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கணவனும் மனைவியும் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் குண்டுவெடிப்பு நடந்த இடத்திற்கு அண்மையில் உள்ள வீடு ஒன்றில் குடியிருந்தனர் என்று சொல்லப்படுகிறது.

அவர்கள் கடந்த 4 மாதகாலமாக அந்த வீட்டில் இருந்ததாக விசாரணையில் தெரிய வந்ததாம்.

பொலீஸார் அவ்விருவரையும் அவர்களது வீட்டில் வைத்து கைது செய்தனர். குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் தீவிர விசாரணைக்கு அவர்கள் உட்படுத்தப்பட்டுள்ளனர். (உ)

முல்லைத்தீவுக்கு அருகில்

## படகு விபத்தில் இரு போராளிகள் பலி

யாழ்ப்பாணம், ஜன. 28

கடந்த சனிக்கிழமை முல்லைத்திவுக்கு அருகில் கடற்பிராந்தியத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் சென்ற படகு ஒன்று விபத்துக்குள்ளாகியதில் இரண்டு போராளிகள் வீரமரணம் அடைந்தனர்.

லெப்டினன்ட் பரண்டி (தர்மகுலசிங்கம், திரிபாய்), ஒஸ்லன் (சிவராசா – திருமலை) ஆகியோரே வீரமரணம் அடைந்தவர்கள்.

அவர்களுக்கு வீரவணக்கம் தெரிவித்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிக்கை விடுத்து உள்ளது.

இதனிடையில் வவுனியா, வேலன் குளத்தில் படையினருடன் நடந்த நேரடி மோதலில் இன்னொரு தமிழீழ விடுதலைப் புலியான கர்கையா வீரமரணம் அடைந்தார் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

அவருக்கும் வீர வணக்கம் தெரிவித்து புலிகள் இயக்கம் அறிக்கை விடுத்துள்ளது. (இ-எ)

### சுபநேரம்

28—01—1987
புதன்கிழமை
சுபநேரம்:
5.06 முதல் 6.36 வரை
ராகுகாலம்:
12.36 முதல் 2.06 வரை
இவை பகலுக்கும்
இரவுக்கும் பொருந்தும்
போதாயன அமாவாசை

## ஹர்த்தாலுக்கு வர்த்தகர் சங்கமும் ஆதரவு

யாழ்ப்பாணம், ஜன. 28

எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ் நகரில் நடைபெறவுள்ள ஹர்த்தாலுக்கு யாழ் வர்த்தகர் சங்கமும் ஆதரவு தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் தமிழர் படுகொலைகளைக் கண்டித்தும் —

வடபகுதிக்கு அரசினால் விதிக்கப்பட்ட எரிபொருள் தடையைக் கண்டித்தும் —

தடை முகாம்களில் சிப்பாய்களின் கெடுபிடிகளைக் கண்டித்து — ஹர்த்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

சகல வர்த்தகர்களும் கடைகளைப் பூட்டி ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவிக்குமாறு யாழ் வர்த்தகர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

போராட்டம் நடத்தப்போவதாக

## மக்கள் வங்கி ஊழியர் தீர்மானம் நிறைவேற்றவில்லை

### அடகு வைத்தோர் சங்கத்தின் அறிக்கைக்கு மறுப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28

போராட்டமும் கோரிக்கைகளும் நியாயமானவை என்று சொல்லவோ, யாழ் செயலகம் முன் போராட்டம் நடத்தவோ நாம் தீர்மானம் எதுவும் நிறைவேற்றவில்லை.

இப்படி யாழ் மக்கள் வங்கி ஊழியர்கள் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்தனர்.

'மக்கள் வங்கி ஊழியரும் மறியல் செய்ய முடிவு'– என்ற தலைப்பில் நேற்று உதயனில் வெளிவந்த செய்தி குறித்து மக்கள் வங்கி ஊழியர்கள் கையொப்பம் இட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

'உதயன்' செய்தியில் வெளியான தகவல்கள் அடகு வைத்தோர் சங்கம் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

● கிளிவெட்டியில் சம்பவம்

## போராளிகளிடம் மாட்டிய கொள்ளையர் கோஷ்டி

### 2 பேர் சுட்டுக்கொலை; ஏனையோர் பொலீஸில்

திருகோணமலை, ஜன. 28

மூதூர்த் தொகுதியில் கிளிவெட்டிக் கிராமத்தில் தமிழர்களால் கைவிடப்பட்ட வீடுகளில் இருந்து யன்னல், கதவு மற்றும் தளபாடங்களை அகற்றிச்சென்ற கோஷ்டி மீது போராளிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு சிங்களவர் கொல்லப்பட்டனர்.

எஸ். எஸ். பீரின், ஆர். எம். பிரேமரத்தின ஆகியவர்களே இறந்தவர்கள்.

கொள்ளையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் ஏனைய நால்வர் பொலீஸாரிடம் சிக்கிக் கொண்டனர்.

உயிரிழந்த இருவர் சம்பந்தப்பட்ட மரணவிசாரணை அண்மையில் பதில் நீதிவான் திரு. எம் கே. செல்வராசா முன்னிலையில் நடந்தது.

உயிரிழந்தவர்களுடன் கூடச் சென்று இருந்த எம். பி. பிரேமரத்ன, டபிள்யு. எஸ் சமரக்கோன், இ. எம். ரிக்கிரி பண்டா ஆர் எம். கப்புறு ப்பண்டா ஆகியோர் சாட்சியமளித்தனர்.

சம்பவதினம் காலை 9.30 மணியாளவில் இறந்தவர்களும் சாட்சியமளித்தவர்களும் மாட்டு வண்டில் ஒன்றில் கிளிவெட்டிக் கிராமத்துக்குச் சென்றனர்.

வன்செயல்கள் காரணமாக தமிழர்களால் கைவிடப்பட்ட வீடுகளில் இருந்த யன்னல்கள், கதவுகள், வளைகள் மற்றும் தளபாடங்களை இவர்கள் சட்டவிரோதமாகக் கொள்ளையடித்து வண்டியில் ஏற்றிக் கொண்டனர்.

உயிரிழந்த இரண்டு பேரும் வீடு ஒன்றின் கூரை மீது இருந்து கொண்டு வளைகள். கைமரங்களைக் கழற்றி கொண்டிருந்தனர்.

திடீரென்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. கூரை மீது இருந்து வளை

(4 ஆம் பக்கம் பார்க்க)

### கப்பல்கள் மோதின

லண்டன், ஜன. 27

ஆங்கிலக் கால்வாயில் எண்ணெய்த் தாங்கிக் கப்பலும் மற்றொரு கப்பலும் மோதிக் கொண்டன.

இதனால் சேதமடைந்த எண்ணெய்த் தாங்கிக் கப்பலிலிருந்து எண்ணெய் கசியத் தொடங்கித் பிடித்தது.

அதிலிருந்த 27 மாலுமிகளும் தப்பிக்கொண்டனர்.

தீப்பிடித்த கப்பலை அணைக்க இரண்டு நாட்கள் செல்லும் எனச் சொல்லப்பட்டது.

(அ)

### சுட்டுக் கொலை

திருகோணமலை, ஜன. 28

கதிர்காமத்தம்பி கணபதிப்பிள்ளை என்பவர் அண்மையில் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவம் மூதூர், பள்ளிக்குடியிருப்புக் கிராமத்தில் இடம்பெற்றது.

இவரின் வயது 58

(உ-எ-150)

## பண்ணையில் சூடு!

யாழ்ப்பாணம், ஜன. 28

பண்ணை பொலீஸ் நிலையத்தில் இருந்து மார்பு நோய் சிகிச்சைப் பிரிவுப் பக்கமாகவந்த இரண்டு சிப்பாய்களை நோக்கி தமிழீழ இராணுவம் தாக்குதல் நடத்தியது.

இத் தாக்குதலின் போது சிப்பாய் ஒருவருக்கு காலில் காயம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

துப்பாக்கி வேட்டுச் சத்தங்களை அடுத்து யாழ் கோட்டை முகாமில் இருந்து துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் காரணமாக தமிழ் ஈழ இராணுவத்தைச் சேர்ந்த போராளி ஒருவர் காலில் காயமடைந்தார். (இ-10)

### மதுவில் நஞ்சு 8பேர் மரணம்

சென்னை, ஜன 28

திருவொற்றியூரில் விஷம் கலந்த மது அருந்தியதால் 8 பேர் உயிரிழந்தனர்.

கவலைக்கிடமான நிலையில் 25 பேர் அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இம் மதுவை விற்றதாகக் கூறப்படும் 3 பேர் கைது செய்யப்பட்டனர். (உ-எ)

### புலிகளின் விமானம் பற்றி 'ராய்ட்டர்' செய்தியாளர்

கொழும்பு, ஜன, 28

தமிழீழ விடுதலைப் புலிகள் தயாரித்து வரும் விமானம் இரண்டு பேர் பயணம் செய்யக்கூடியது.

தனி எஞ்ஜின் பொருத்தப்பட்டது.

சிறகின் நீளம் 15 அடி (5 மீட்டர்)

இப்படி 'ராய்ட்டர்' செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

"பெப்ரவரியில் விமானத்தைச் செயல்படுத்த முயற்சிப்போம். இதில் வெற்றி கண்டால் சக்தி கூடிய எஞ்ஜினை பொருத்துவோம்"—

இப்படி ஆயுதத் தொழிற்சாலைக்குப் பொறுப்பான கே. யோகரத்தினம் தெரிவித்தார் என்று 'ராய்ட்டர்' செய்தியாளர் மரிலின் ஒட்சிமார் அறிவிக்கிறார்.

(இ-எ)

### ★ ரசாயன ஆயுதங்களும் தயாரிப்பாம்

கொழும்பு, ஜன. 28

தமிழீழ விடுதலைப் புலிகள் ரசாயன ஆயுதங்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருக்கின்றனர் என்று நம்புகின்றோம்.

இப்படி இலங்கை இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர் என்று, ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்து உள்ளது

(இ-எ)

முச்சந்தி முனி



பஸ் ஒரு மணித்தியாலம் முந்தி வெளிக்கிட்டாலும், இராமண்ணை மார் ரயிலைப் பிடிக்க விடுவினமோ . . . அவை விட்டை தான் கேட்க வேணும் . . . !

## யாழ்தேவி இணைப்பு பஸ் காலை 5 மணிக்கு புறப்படும்

யாழ்ப்பாணம் ஜன, 28

தினமும்காலை 6 மணிக்கு யாழ் பஸ் நிலையத்தில் இருந்து புறப்படும் யாழ்தேவி இணைப்பு பஸ் தற்பொழுதுகாலை 5 மணிக்கு நகரில் இருந்து புறப்படுகிறது.

ஆனையிறவு இராணுவ முகாமில் தற் பொழுது ஏற்பட்டிருக்கும் சிப்பாய்களின் கெடுபிடி காரணமாகவே இந்த நேரமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

சிப்பாய்களின் சோதனைகள் காரணமாக பல மணி நேரம் வாகனங்கள் முகாமில் தாமதிப்பதால் யாழ்-தேவியை பிடிக்க முடியாத நிலையில் பயணிகள் பெரும் அவதிக்குள்ளாகின்றனர்.

இதன் காரணமாகவே நேரத்துடன் பஸ்கள் யாழ் பஸ் நிலையத்தில் இருந்துபுறப்படுகின்றன.

(இ-10)

## முஸ்லிம் விவசாயி சுட்டுக் கொலை

திருகோணமலை, ஜன 28

இனந்தெரியாதோரால் முஸ்லிம் விவசாயி ஒருவர் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பெரிய கிண்ணியாவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இறந்தவரின் பெயர் ஏ. எம். சாலிஹு வயது 50

சம்பவதினம் இரவு வயலில் காவலுக்கு இவர் நின்றார். அச்சமயம் இனந் தெரியாதோர் இவரைச் சுட்டுவிட்டு மறைந்துவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-எ-150)

## ஆரம்ப பாடசாலைகளை இந்து, இந்து மகளிர் கல்லூரிகளுடன் இணைக்குக!

### கல்விப் பணிப்பாளரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன 28

யாழ் இந்து மகளிர் கல்லூரியுடன் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையையும், யாழ் இந்துக் கல்லூரியுடன் இந்து ஆரம்ப பாடசாலையையும் இணைக்கும் படி யாழ் மாவட்டக் கல்விப்பணிப்பாளருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது:

அப்படி உடனடியாக இணைக்க முடியாத பட்சத்தில் இரண்டு ஆரம்ப பாடசாலைகளிலும் எட்டாம் வகுப்பு வரை வகுப்புக்களை நடத்தும் படியும் கல்விப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

நீராவியடி சைவ பரிபாலன சபை நாவலர் மண்டபத்தில் கடந்த ஞாயிறு நடந்த பெற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### அரண்கள் சிதைகின்றன

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ் பஸ்நிலையச் சுற்றுடலில் உள்ள மண் மூடைப் பாதுகாப்பு அரண்கள் சிதைந்து வருகின்றன.

அண்மையில் பெய்த மழையால் சாக்குகள் இத்துப்போனதே இதற்குக்காரணம்.

ஆஸ்பத்திரிக்கு முன்பாகவும், பஸ்நிலையத்திலும், நவீனசந்தைக்கு முன்பாகவும் உள்ள மண் மூடைகளே இத்துப்போய் சரிந்து விழுந்து காணப்படுகின்றன. (இ-5)

### ரயில் மீது சூடு

யாழ்ப்பாணம், ஜன. 28

ஓடிக்கொண்டிருந்த ரயில் மீது போராளிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனால் ஒரு சிப்பாய் காயமடைந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னாருக்கும் உயிலங்குளத்துக்கும் இடையில் இச் சம்பவம் நடந்தது.

இதனை அடுத்து சிப்பாய்கள் திருப்பிச் சுட்டனர். வயலில் வேலை செய்துகொண்டிருந்த சில விவசாயிகள் காயமடைந்தனர். (இ-10)

### எரிபொருள்: இன்று ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜன. 28

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு எரிபொருள் வழங்குவது சம்பந்தமாக வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் இன்று கொழும்பில் உள்ள உயரதிகாரிகளுடன் தொடர்பு கொள்வார்.

யாழ் அரச அதிபருக்கு உள்ள விசேட தொலைபேசி வசதியைப் பயன்படுத்தி திரு. கனகரத்தினம் நேரடியாக அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

சுவிஸிலிருந்து திருப்பியனுப்பப்பட்ட

## தமிழ் அகதிகளை சிங்களப் பகுதியில் குடியமர்த்துவது அநீதி

யாழ்ப்பாணம், ஜன. 28

சுவிட்சர்லாந்தில் இருந்து முதலில் அனுப்பப்பட்ட 26 தமிழர்களும் சிங்களப் பகுதியில் நன்றாக இருக்கிறார்கள் என்று கூறுவது அநீதி.

ஓர் இனத்தவர்களை, அந்த இனச் சமூகத்தில் இருந்து பிரித்தெடுத்து மாற்றுச் சமூகத்தில் வாழ பலாத்காரப்படுத்துவது சமூக விரோதச் செயலாகும். சொந்த இயற்கைச் சூழலிலேயே எந்த இனத்தவரும் வாழ உரிமையுண்டு.

இப்படி யாழ் பெற்றோர் சங்கச் செயலாளர் திரு. சி. பொன்னையா (சட்டத்தரணி) சுவிட்சர்லாந்து அரசுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடிதத்தின் முழு விவரமும் நாளைய உதயனில் வெளிவரும்.

(உ-எ)

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சின்னஞ் சிறு விளம்பரங்கள் ★

**வகுப்புகள்**

புதிய வகுப்புகள் க.பொ.த. (உயர்) 89 ஆரம்பம்: 05-02-87 விஞ்ஞானப் பாடங்கள் மட்டும் Science Centre, கரவெட்டி.

GAQ, G.S.Q விரிவுரைகள் ஆங்கிலத்தோடு சித்தன்கேணிச் சந்தியடியில் பல்கலைக் கழக விரிவுரையாளர்களால் 31ஆம் திகதி காலை 8.30 மணிக்குத் தொடங்கும். வட்டுக்கோட்டை மாவடிச் சத்தி கலா நிலையத்தோடு தொடர்பு கொள்க.

பிறிலியன் அக்கடமி. நெல்லியடி. கிளை: பருத்தித்துறையில். A/L 88, 89ஆம் ஆண்டுக்கான கலை, வர்த்தகப் பிரிவு. பொருளியல்: சின்னத்தம்பி, வர்த்தகம்: கனக்ஸ், கணக்கியல்: பிரபாகரன், அளவையியல்: கேசவன் / விக்கி, தமிழ் - இந்து நாகரிகம்: காரை சுந்தரம்பிள்ளை. ஆரம்பம்: 2-2-1987

# மயிலிட்டி மார்பு நோய்

# வைத்தியசாலை அவல நிலை

## 5 வார்ட்டுகள் மட்டும் செயற்படுகின்றன

### ஊழியர்கள் பற்றாக்குறை

காங்கேசன்துறை, ஜன 28

வட பகுதியில் ஒரே ஒரு மார்பு நோய் வைத்தியசாலையாக விளங்கும் மயிலிட்டி மார்புநோய் வைத்தியசாலை மிகவும் சீர்கெட்ட நிலையிலிருப்பதால் மார்பு நோயாளர்கள் தகுந்த சிகிச்சை பெற முடியாமல் அவதிப்படுகிறார்கள். வைத்தியசாலையும் சீராக இயங்க முடியாமலிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வட பகுதியில் உள்ள ஒரேயொரு மார்பு நோய் வைத்தியசாலையாக விளங்கும் இவ் வைத்தியசாலை 1980 ஆம் ஆண்டிலிருந்து எவ்வித கவனிப்பும் பராமரிப்பும் இன்றிச் சீர்கெட்ட நிலையை அடைந்துள்ளது.

கொழும்பிலுள்ள தலைமை நிர்வாக அலுவலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் இவ் வைத்தியசாலைக்கு பல வருடங்களாக நிரந்தர வைத்திய அதிகாரி இல்லாமலிருந்து கடந்த 6 மாதத்திற்கு முன்பே நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவர் நியமனம் செய்யப்பட்டார்.

ஆனால் உதவி வைத்திய அதிகாரியின் இடம் இன்னமும் காலியாகவே உள்ளது

சராசரியாக 100 காச நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெறும் இவ் வைத்தியசாலையின் கட்டடங்கள், தளபாடங்கள் யாவும் பழுதடைந்துள்ளன.

இங்குள்ள 8 வார்ட்டுகளில் 5 வார்ட்டுகள் மட்டுமே செயல்படுகின்றன.

கட்டில்கள் கறள் பிடித்தும் மெத்தைகள் பிய்ந்த நிலையிலும் உள்ளதால் நோயாளர்கள் பெரிதும் கஷ்டமுற நேரிடுகிறது.

வைத்தியசாலையைச் சுற்றி வேலியோ மதிலோ எதுவுமில்லாமலிருப்பதால் கட்டாக்காலி ஆடு, மாடுகள், நாய்கள் வைத்தியசாலைக்குள்ளே தங்குமிடம் அமைத்துக் கொண்டு நோயாளர்களுக்குத் தொந்தரவு கொடுக்கின்றன.

மின்சார இணைப்புக்கள் சீர் செய்யப்படாததால் மின் ஒழுக்கு அபாயம் இருந்து வருகிறது

வைத்தியசாலையில் நிலவும் ஊழியர் பற்றாக்குறை பல வருடங்களாக நிவர்த்தி செய்யப்படாமல் உள்ளது

தற்காலிக மேற்றன் ஒருவரும், 2 தாதிமாரும் இங்கு கடமை புரிகின்றனர்.

சுத்திகரிப்பு தொழிலாளர் மூவர் கடமை புரிகின்றனர்.

3 லிகிதர்கள் கடமை புரிந்த இவ் வைத்தியசாலையில் தற்போது ஒரு லிகிதர் மட்டுமே கடமை புரிகிறார்.

தற்காலிக ஊழியர்கள் 3 பேர் கடமை புரிகின்றனர். நீரிறைக்கும் இயந்திர இயக்குநர் இல்லாதிருப்பதால் வைத்தியசாலை மேற்பார்வையாளரே அதனையும் கவனித்து வருகிறார்.

காசநோய் கொடிய நோய்களில் ஒன்றாக கருதப்பட்டாலும் அதனை ஆரம்பத்தில் கண்டு பிடித்து தகுந்த சிகிச்சை அளித்தால் குணப்படுத்தக்கூடிய வைத்திய சிகிச்சை முறைகள் தற்போது அறிமுகப்படுத்தப் பட்டுள்ளபோதும் மேற்படி வைத்தியசாலையின் சீர்கெட்ட நிலையால் வட பகுதி மார்புநோயாளர்கள் தகுந்த சிகிச்சையை பெற முடியாமல் பெரிதும் அவதியுறுகின்றனர்.

வைத்தியசாலைக்குப் பொறுப்பானவர்களும், பொதுநல நிறுவனங்களும் இதற்கு ஆவன செய்ய வேண்டுமென பிரஸ்தாப வைத்தியசாலை அபிவிருத்திச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-68)

## மக்கள் முகம்

### கால்நடை வளர்ப்போர் சங்கம்

யாழ்ப்பாணம், ஜன 28

கால் நடை வளர்ப்போர் சங்கம் அண்மையில் யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது.

நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: டாக்டர் மோகனதாஸ். உபதலைவர்: எஸ். லிங்கநாத பிள்ளை. செயலாளர்: தி வர்ணலிங்கம், உப செயலாளர்கள்: சி. நடராசா, எஸ். சிவநேசன். பொருளாளர்: ரி. சம்பு நாதன். (இ-எ)

## சந்தர்ப்பங்கள் பல தடவை கிடைப்பதில்லை

### சித்ருபானந்தா கூறுகிறார்

பருத்தித்துறை, ஜன. 28

"மனிதனுக்குநல்ல சந்தர்ப்பங்களை கடவுள் பலமுறை கொடுப்பதில்லை. நல்ல சந்தர்ப்பங்கள் வாய்க்கும் போது அதனைப் பயன்படுத்துபவன் மேல்நிலை அடைவது உறுதி."

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர கல்லூரியின் இந்த மாமன்றம் ஒழுங்கு செய்த சிறப்பு நிகழ்ச்சியில் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ருபானந்தா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்விழா கல்லூரி அதிபர் திருமதி லீலாவதி சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசியதாவது:-" சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போது அதனைப் பயன்படுத்த வேண்டும். இதற்கு ஒரு நல்ல கதை உண்டு.

ஒரு செம்படவன் ஒரு நாள் மீன் பிடிக்கச் சென்றான் அவனுக்கு மீன்கள் அகப்படவில்லை. ஆனால் ஒரு பை நிறைய கூழாங் கற்கள் மட்டுமே கிடைத்தன. அவன் மிகவும் வெறுப்படைந்து ஒவ்வொரு கல்லாக கடலில் எறிந்து கொண்டு கரையை அடைந்தான்.

அவன் கையில் மீதியாக இருந்த ஒரு கல்லை எதேச்சையாக ஒரு பொற்கொல்லனிடம் காட்டினான். பொற்கொல்லன் அக்கல்லைப் பார்த்துப் பிரமித்துப் போனான். அதன் பெறுமதி ஒரு லட்சம் ரூபாய் என மதிப்பிட்டான்.

செம்படவன் ஏற்கனவே எறிந்த கற்களின் மதிப்பைப்பற்றி இனிப் பேசிப்பயனில்லை. அவனுக்குக் கிடைத்த பணத்துடன் வாழ்ந்தான்.

அச் செம்படவனுக்கு நல்ல சந்தர்ப்பம் வந்தது. சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தாத படியால் வீணாகிவிட்டது.

மாணவர்கள் படிக்கும் காலத்தில் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் பல. இக்காலத்தில் மேன்மையடையப் பாடுபடுவதே இவர்களது பெரும்நோக்கமாக இருக்க வேண்டும்." என்று அவர் கூறினார். (இ-18)

## சுன்னாகம் ப. நோ. கூ. சங்க கூட்டம்

சுன்னாகம், ஜன 28

சுன்னாகம் அம்பேத்கார் சனசமூக நிலையத்தில் நாளை வியாழன் மாலை சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவுச்சங்கிளை 2 மாத செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

மாதர் சங்க தலைவர் திருமதி. பி. சரோஜினி தேவி தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் மாதர்களை எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகள் பற்றியும்- இன்றைய நிலையில் மாதர்கள் பணி பற்றியும் ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-27)

## சண்முகநாத வித்தியாலயம் புதியகட்டடம்

புங்குடுதீவு, ஜன. 28

புங்குடுதீவு ஸ்ரீசண்முகநாதன் வித்தியாலயத்திற்கென சுமார் 50ஆயிரம் ரூபா செலவில் பெற்றோர்களின் சுய முயற்சியால் நிறுவப்பட்ட புதிய கட்டடம் கடந்த திங்கட்கிழமை காலை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

முன்னாள் அதிபர் திரு ஐ நாகரெத்தினம் இப்புதிய கட்டடத்தை திறந்து வைத்தார்.

வித்தியாலய அதிபர் திரு. இ. நடராசா தலைமையில் வைபவம் நடைபெற்றது. (இ-131)

## பலாலியில் தும்புத் தொழிற்சாலை

சுன்னாகம், ஜன 28

பலாலியில் புதிய தும்புத் தொழிற்சாலையை இளைஞர்கள் நிறுவியுள்ளனர்.

மயிலைப்பங்கு இளைஞர் ஒன்றியத்தினர் நிறுவியுள்ள மூன்றாவது தும்புத் தொழிற்சாலையான இதில் தயாராகும் தும்புத்தடி, தடைப்பங்கள் மற்றும் தும்புத் தயாரிப்புகள் அனைத்தும் மிக குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது

தேசியதும்புத்தொழிச மன்றத்தினரின் ஆலோசனையுடன் தொழில் படும் மூன்று தும்புத் தொழிற்சாலைகளிலும் சுமார் நூற்றி இருபது இளைஞர்களும் யுவதிகளும் தொழில் வாய்ப்புப் பெற்றுள்ளனர். (இ-27)

# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

## கூட்டுறவுச் சங்கங்கள் திருமலையில் செயலிழப்பு

கொழும்பு, ஜன, 28

வன்செயல்கள் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் செயலிழந்து போய் விட்டன.

திருகோணமலை மாவட்ட இணைப்பு அதிகாரி லெப்டினண்ட் கேர்ணல் லக்ஷ்மன் விஜயரட்ண முன்கண்டவாறு அறிவித்திருக்கிறார்

வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு புனர்வாழ்வளிக்கும் வேலைகள் பற்றி 1986 ஆம் ஆண்டில் பெரிதாகப் பேசப்பட்டது நடந்தது மிகச் சொற்பமே.

எவ்வளவு காலத்துக்கு அகதிகளை முகாம்களில் வைத்து அரசினால் பராமரிக்க முடியும்?

இலவச உணவுப் பொருள்களை வழங்கிக் கொண்டிருந்தால் அகதிகள் தொடர்ந்து அகதிகளாகவே இருக்க விரும்புவார்கள்.

--இப்படி இணைப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

திருமலை மாவட்ட புனர்வாழ்வுக் கமிட்டிக் கூட்டத்தில் பேசுகையில் இணைப்பதிகாரி இத்தகவல்களை வெளியிட்டார்.

கூட்டத்துக்குத் தலைமை வகித்த அரச அதிபர் திரு டி. எம். ஆரியரத்ன பேசுகையில் கூட்டுறவு இயக்கம் திருமலை மாவட்டத்தில் செத்து விட்டது என்பதை ஏற்றுக்கொண்டார். (உ-எ)

## விக்ரறி வெற்றி

சாவகச்சேரி, ஜன. 28

சாவகச்சேரி விக்ரறி விளையாட்டுக் கழகமும் குப்பிளான் விக்னேஸ்வராக் கழகமும் கலந்து கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் சாவகச்சேரி விக்ரறிக் கழகம் 2:1 கோல்களால் வெற்றியீட்டியது (இ-31)

## பாடசாலைகள், நிலையங்களில்

# காசநோய் தடுப்பு போதனை

காங்கேசன்துறை ஜன 28

காசநோய் தடுப்புச் சம்பந்தமான சுகாதாரக் கல்வியை சனசமூக நிலையங்கள், கிராமஅபிவிருத்திச் சங்கங்கள், பாடசாலைகள் மற்றும் பொது நிறுவனங்கள் ஊடாக போதிக்க இலங்கை காசநோய் தடுப்புச் சங்க வலி வடக்குக் கிளை தீர்மானித்துள்ளது

இக்கிளையின் கூட்டம் தெல்லிப்பழை ப.நோ கூ. சங்க மண்டபத்தில் அதன் தலைவர் லயன் எஸ். சிவமகராசா தலைமையில் நடைபெற்றது.

அந்த சமயமே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

காசநோய் தடுப்பு முறைகள், அதற்கான சிகிச்சை முறைகள்பற்றி பொதுமக்கள் சரியாக அறியாதிருப்பதால் இந்நோய் பரவும் அபாயம் ஏற்படுகிறது.

ஆகவே இது குறித்து பொதுமக்களுக்கு அறிவுறுத்துவதற்காக பெப்ரவரி முதல் வாரத்தில் கருத்தரங்குகள் நடத்துவதென தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மயிலிட்டியில் அமைந்துள்ள காசநோய் வைத்தியசாலை மிகவும் சீர்கெட்ட நிலையில் இருப்பதால் உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு வைத்தியசாலையை சீர் செய்ய ஆவன செய்வதெனவும், காசநோய் கொடி தினம் நடத்தி நிதி சேகரித்து காச நோயாளர் நலன்களுக்கு உதவுவதெனவும் மேற்படி கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது. (இ-68)

## கிராமிய மன்றுகளில் ஒரேவித நடைமுறை

### அவசியம் என வலியுறுத்து

கரவெட்டி, ஜன. 28

தமிழ்ப் பகுதியில் இயங்கிவரும் கிராமிய நீதிமன்றங்கள் ஒரே விதமான நடைமுறை விதிகளையும், ஒரே சட்டக் கோவையின் அடிப்படையிலும் அனுசரணையுடனும் ஒருமைப்பாட்டுடன் இயங்குதல் அவசியம்.

-இவ்வாறு வடமராட்சி பிரசைகள் குழுத் தலைவர் திரு. ஜே ஜீ இராஜேந்திரம் குறிப்பிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வதிரி திரு இருதயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற நெல்லியடி பிரசைகள் குழுக் கூட்டத்திற்கு சட்டத்தரணி திரு. வி. மகாலிங்கம் தலைமை வகித்தார்.

இக்கூட்டத்தில் திரு. இராஜேந்திரம் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்-

சட்டங்களும் அதற்குரிய நடைமுறைகளும் கிராமத்திற்கு கிராமம் வேறுபடுமாயின்சரியான ஓர் தீர்ப்பை வழங்குவது மிகவும் கடினம் எனக் குறிப்பிட்டார்.

சட்டத்தரணி திரு. ஏ கே. நடராசா பேசுகையில் இன்று கிராமிய நீதிமன்றங்கள் பொது மக்களின் இன்னல்களை உணர்ந்து விரைவாக வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்குவதுடன் குறைந்த கட்டணத்தையும் அறவிடுவது மிகவும் பாராட்டப்படத்தக்க அம்சமாகும்- என்றார். (உ-70)

## எரிபொருள் தட்டுப்பாடு: தீவுப்பகுதி மோசமாக பாதிப்பு

புங்குடுதீவு, ஜன. 28

தீவுப் பகுதியில் எரிபொருள் தட்டுப்பாட்டினால் மக்கள் சொல்லொணா அவதியுறுகின்றனர்.

மண்ணெண்ணெய் கிடைக்காமையால் இரவு வேளைகளில் வீடுகளில் விளக்கேற்ற முடியாதிருப்பதாக மக்கள் கூறுகிறார்கள்.

கள்ளச் சந்தையில் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 33 ரூபா வரை விற்கப்படுகிறது

தோட்டச் செய்கையாளர்கள் தங்கள் தோட்டங்களுக்கு நீர்ப் பாய்ச்சுவதற்கு எரிபொருள் கிடையாமையால் பெருங் கவலையடைகிறார்கள்.

பல லட்சம் ரூபா பெறுமதியான தோட்டப் பயிர்கள் நீரின்றிக் கருகுகின்றன. (இ-131)

## கைதானவர் இன்னும் வீடுதிரும்பவில்லை

கொடிகாமம், ஜன. 28

பூநகரியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட வரணி குடமியன் வேலுப்பிள்ளை மணிவண்ணனுக்கு (வயது 23) நடந்தது என்ன?

குடமியன்இளைப்பாறிய பாடசாலை அதிபரான திரு க. வேலுப்பிள்ளையின் மகனை மணிவண்ணன்என்றழைவாகமாகாசு இந்த இளைஞன் 4-6-86 இல் பூநகரி மன்னார் வீதி பல்லவராயன் கட்டுப் பகுதியில் மெசின் வேலைக்குச் சென்றபோது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டிருந்தார். (இ-75)

## கலாசாரப் புரட்சி சீனாவை பின் தள்ளியது

### அங்கு சென்று திரும்பிய கம்யூனிஸ்ட் பிரமுகர் கூறுகிறார்

கரவெட்டி, ஜன. 28

சீனாவில் 1966 – 77 காலபபகுதியில் நடைபெற்ற கலாசாரப் புரட்சி பல முரண்பாடுகளை தோற்றுவித்ததினால் சீனாவின் முன்னேற்றம் பல ஆண்டுகளுக்கு பின் தள்ளப்பட்டிருந்தது. இன்று சீனா வெளி நாடுகளுடன் தொடர்பு கொண்டு சுதந்திர வர்த்தக வலயங்கள் போன்ற அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

யாழ் மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர்திரு பொன். குமாரசாமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்மையில் சீனாவிற்கு விஜயம் மேற்கொண்டு [illegible] பொதுச் செயலாளர் திரு. கூ. போ. பாஞ்ச உட்பட பல பிரமுகர்களைச் சந்தித்து முக்கிய இடங்களைப் பார்வையிட்டபின் இவர் தாயகம் திரும்பி இருந்தார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது :-

தலைவர் மாசேதுங் சீனாவின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்புக்களை மறக்கவோ அல்லது மறுக்கவோ முடியாது.

அரசியல் சித்தாந்த கருத்துக்கள் முரண்பட்ட போதும் மக்கள் சீனம் ஒரு சோஷலிச அமைப்பை வெற்றிகரமாக கட்டியெழுப்பி வருகின்றது.

இப்படி அவர் கூறினார். (இ-70)

## சில இயக்கங்கள் புலிகளால் தடை செய்யப்பட்டது ஏன்?

### புலிகள் பிரமுகர் விளக்கம்

பருத்தித்துறை. ஜன 28

சில இயக்கங்கள் தலைமைப்பீடப் பதவி ஆசையினால் இளைஞர்களைத் தவறான பாதையில் வழி நடத்தின அதனாலேயே தமிழ் மண்ணில் கொலை, கொள்ளை போன்றவை ஏற்பட்டன. இக் காரணங்களினால் தான் இந்த இயக்கங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் தடை செய்யப்பட்டன

பருத்தித்துறை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் திரு. நாதன் இவ்வாறு கூறினார்.

ஞாயிறு மாலை வடஇந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில் ஒழுங்கு செய்யப்பட்ட விசேஷ கருத்தரங்கு ஒன்றில் அவர் தொடர்ந்து பேசியதாவது-

எதிரி எங்களை முழுமூச்சாகத் தாக்கும் மிக நெருக்கடியான கட்டத்தை நாம் விரைவில் எதிர் நோக்க வேண்டி உள்ளது

ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் தாக்குதல்களை முறியடிக்க மக்கள் தங்களைத் தயாரிப்படுத்த வேண்டும்.

இராணுவ - இயக்க மோதல்களில் பொது மக்கள் தமக்குப் பங்கில்லை என எண்ணக் கூடாது.

வடபகுதியிலுள்ள 18 ஆயுதப்படை முகாம்களை தமிழீழ விடுதலைப்புலிகள் தமதுகட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்:

இந்த நடவடிக்கை மூலம் இயக்கம் பொது மக்களைக் காத்து வருகிறது

இதனால் இயக்கத்துடன் இணைந்து மக்கள் சகல வேலைத் திட்டங்களிலும் பங்காற்றுவது போல இராணுவ எதிர்ப்புப் போராட்டங்களிலும் பங்களிக்க வேண்டும்.

இன்று பல கல்லூரி மாணவர்கள் எமது இயக்கத்தில் சேர்ந்து பணியாற்ற முன் வந்துள்ளார்கள். ஆனால் கல்வி கற்கும் மாணவர்களை உடனடியாக இயக்கத்தில் சேர்ப்பதில்லை. அவர்களின் கல்வி முடிவடைந்த பின்பே அவர்களைச் சேர்த்துக் கொள்வதற்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளோம்.

பருத்தித்துறையில் பாதுகாப்பு அரண்களுக்கப்பால் களத்தில் இது வரை 19 தமிழீழ விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

'எம்மால் தடைசெய்யப்பட்ட இயக்கப் போராளிகள் எம்முடன் வந்து சேர்ந்து கொள்ள விரும்பினால் நாம் சேர்த்துக் கொள்ளத் தயார்.

இதனை முதன்முதலில் பருத்தித்துறையில் பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்த இயக்க மேலிடத்துடன் பேசி ஒழுங்கு செய்யலாம்.

மேலும் இயக்கத்தில் முழு நேர உறுப்பினராகச் சேர்ந்து கொள்ளவும் பொது மக்களுடன் இணைந்த பகுதிநேர பாதுகாப்பு வேலைகளுக்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இப்படி அவர் கூறினார். (இ-118)

## ஆசிரியரின் தேவைகள் நிவர்த்திசெய்யப்பட வேண்டும்

அச்சுவேலி, ஜன. 28

ஆசிரியர்களின் தேவையை அறிந்து நிவர்த்தி செய்வதன் மூலம் ஆசிரியர்கள் தமது கடமையை மன நிறைவுடன் செய்வதற்கு உதவி செய்ய முடியும். இந்த வகையில் கல்வித் திணைக்கள நிர்வாகப் பிரிவு அலுவலக உதவியாளர் திரு க. இராசலிங்கம் தனது கடமையை சிறப்பாகசெய்து ஆசிரியர்களின் பாராட்டைப் பெற்றார்.

யாழ் மாவட்ட கல்வித் திணைக்களகல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் மேற்கண்டவாறு கூறினார்.

கல்வித் திணைக்கள நிர்வாகப் பிரிவு அலுவலகஉதவியாளராகக் கடமையாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற திரு. கே. இராசலிங்கத்துக்கு நிர்வாகப் பிரிவு ஊழியர்கள் பிரிவு உபசாரம் அளித்தனர்,

பிரிவுபசார வைபவத்தில் பணிப்பாளர் ஜனாப் எம். எம் மன்சூர், பிரதம கல்வி அதிகாரி திரு. கே. சோமசுந்தரம், திரு. எஸ். அருளானந்தம், திரு. எஸ். விவேகானந்தன் உட்படப் பலர் உரையாற்றினர். (இ-11)

VACANCY

Jaipur Foot Workshop

WORKS MANAGER

உலோக, தோல், உருக்கு வேலைகளில் தேர்ச்சியும் பயிற்சியும் தொழிற்சாலை முகாமைத்துவ அனுபவமும் உள்ள தொழில் நுட்பவியலாளர் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். தகைமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும். 12 2-87க்கு முன் விண்ணப்பிக்கவும்.

தலைவி,
அன்னையர் முன்னணி,
ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிற்சாலை,
5, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

அரிசி அன்னமாவது போல் மனிதன் சிந்தனையின் பேசிக்கொண்டிருந்தால் பெருவாழ்வு கிட்டாது.

— சுவாமி சித்பவானந்தர்


# உதயன்

இல, 15, ஆலதழுவுங்கை தொலைபேசி: 24805, 22073
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம் 28-1-1987 த.பெ. 23


## படிப்பில்லாச் சிறுவர்

யாழ்ப்பாணத்தில் பள்ளிப்படிப்பு அறியாத சிறுவர்கள், இளைஞர்கள் இப்போதும் இருக்கிறார்கள். இது பெரும் வேதனைக்குரிய விடயம். இவ்வாறு கவலை தெரிவித்திருக்கிறார் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் கல்வித் துறைத் தலைவர் பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்கள்.

ஈழத் தமிழ் மக்களின் எதிர் காலத்தில், அவர்களின் சுபீட்சத்தில், நலனில் அக்கறை உள்ள சகலருக்கும் பெரும் துயர் தரும் விடயமாகும் இது.

ஆண்டாண்டு காலமாக, வெளிநாட்டார் ஆட்சிக்கு முன்னரும்கூட ஈழத் தமிழ் மக்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கி இருக்கிறார்கள். வெள்ளையர் ஆட்சியில் யாழ்ப்பாணம் கல்வித்துறையில் பெரு வளர்ச்சி கண்டது. அந்தப் பாரம்பரியம் இதுவரை காலமும் பேணிப்பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இலங்கையின் தென்பகுதி மக்கள் தமிழர்களை ஒதுக்க வேண்டும், ஒடுக்க வேண்டும் என்று விழைந்ததற்கு அத்திவாரம் தமிழர்களின் கல்வி கேள்விமீது ஏற்பட்ட பொறாமையே ஆகும்.

ஏனைய பகுதி மக்களைவிட வட பகுதி மக்கள் கல்வித்துறையில் முன்னேறியமைக்கு உத்தியோகச் சலுகை ஒரு காரணமாக இருந்தது என்று சொல்வாரும் உளர். அதிலும் உண்மை இல்லாமல் இல்லை.

எனினும் தமது பிள்ளைகள் கல்வி கேள்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற அதிக அக்கறையும் ஆர்வமும் தமிழ்ப் பெற்றோரிடம் அளவுக்கு அதிகமாக இருந்தது. அதுவே தமிழர்கள் ஏனையோரைவிட கல்வித் துறையில் முன்னணியில் நிற்க மிகப் பிரதான காரணமாக அமைந்தது.

அதனாலேயே வடக்கு மக்களில், குறிப்பாக யாழ்ப்பாணப் பகுதி மக்களில் கல்வி வாசனை இல்லாதவர் எண்ணிக்கை குறைவாக இருந்தது. விவசாயம் செய்பவனும் அடிப்படைக் கல்வி கற்றவனாக இருந்தமைக்கு, இருப்பதற்கு அதுவே காரணம்.

தாம் பெற்ற கல்வியைவிட, தனது பிள்ளை அதிக கல்விஞானம் பெறவேண்டும் என்ற ஆசையும் ஆர்வமும் ஒவ்வொரு தமிழ்ப் பெற்றோரிடமும் காணப்பட்டது. அதனாலேயே பல கஷ்டங்களுக்கு மத்தியிலும் அவர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பிக் கல்வி பெற வைத்தார்கள்.

இலவசக் கல்வி முறை அமுலுக்கு வந்த பின்னர் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளும் படிப்பறிவு பெற வாய்ப்பு ஏற்பட்டது. ஏனைய செல்வங்களைவிட கல்விச் செல்வமே மேலானது என உணர்ந்து தமிழ் மக்கள் அதற்கு முன்னுரிமை கொடுத்தார்கள்.

இத்தகைய பெரும் கல்விப் பாரம்பரியத்தை உடைய தமிழர்களின் எதிர்காலச் சந்ததியினரில் பள்ளிப் படிப்பறிவு இல்லாதவர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்பது பெரும் கவலைக்கு உரியதாகும்.

இப்போதைய நெருக்கடியான சூழ்நிலையைக் கருதியாயினும் சரி, பொருளாதாரக் காரணிகள் கருதியாயினும் சரி, தமிழ் மக்கள் தமது பிள்ளைகளின் கல்வியில் அக்கறை காட்டாதிருப்பின் அதைவிட மடமை வேறு இருக்க இயலாது.

அது தமிழர் எதிர்காலத்தை இருள் சூழச் செய்து விடும். உரிமைகளுக்கும், சுதந்திரத்துக்கும் நடத்தப்படும் இப்போதைய முயற்சிகள், அர்ப்பணிக்கப்படும் தியாகங்கள் யாவும் வீணாகி விடும். கல்வி அறிவில்லாத சமுதாயத்தால் சுதந்திரத்தையும், உரிமைகளையும் சரியான முறையில் அனுபவிக்க முடியாது. தமிழர்களின் கல்விப் பாரம்பரியமும், பெருமையும் வேரறுந்து போயின் எதிர்காலம் சூனியமாகும். கல்வி அறிவு பெற்ற ஒரு சாரார் கல்வி வாசனை இல்லாதவர்களைக் கொத்தடிமைகளாக்கும் பயங்கரமான சமூக அமைப்பும் உருவாகும்.

எனவே இதனை நன்குணர்ந்து, பள்ளிப் படிப்பறியாத சிறுவர்கள் எவருமில்லை என்ற ஒரு நிலையை யாழ்ப்பாணத்தில் மட்டும் அன்றி தமிழ் மண் எங்கும் உருவாக்க வேண்டும்.

இதில் பெற்றோருக்கே மிகப் பெரும் பங்குண்டு. அவர்களது பொறுப்பை, கடமையை உணர்த்தும் பணியை சமூக நல இயக்கங்கள் மேற்கொள்ள வேண்டும். தமிழ்ச் சிறுவர் கல்விச் சபை ஒன்றை நிறுவுதல் மேலும் பயன் தரும்.

அந்தச் சபை பாடசாலை செல்லாத சிறுவர் குறித்து மதிப்பீடு ஒன்றை நடத்துதல்; அத்தகைய சிறுவர்கள் உள்ள பகுதிகள், குடும்பங்களை (குடும்பப் பொருளாதார மட்டங்களை) இனங்காணுதல்; பள்ளிக்குச் செல்லத் தூண்டுதல் அளித்தல் ஆகிய பன்முகச் செயல் திட்டங்களை ஒருங்கிணைத்து நடவடிக்கையில் இறங்க வேண்டும்.

வெளிநாடுகளில் உள்ள தமிழர்களின், சமூக அபிமானிகளின் உதவியை நாடி அதற்கென ஒரு நிதியத்தையும் உருவாக்கலாம்.

இவை குறித்து இப்போது சிந்திக்காமல் இருப்பின் வருங்காலப் பிரசைகளை இருளில் வீழ்த்திய பழி எல்லோரையும் சூழும்.

## பாஸ்போர்ட் தாமதம்

கொழும்பு, ஜன. 28

இந்திய அரசுக்கு விசுவாசம் தெரிவித்து கையொப்பமிடாததால் இந்தியா திரும்ப உள்ள தோட்டத் தொழிலாளருக்கு பாஸ்போர்ட் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டு உள்ளது.

இப்படி கண்டியில் உள்ள இந்திய உதவி தூதர் திரு. ராஜ்துவா தெரிவித்தார். (இ-எ)

## செக். அதிபர் சீனு விஜயம்

பிராக், ஜன. 27

செக்கோஸ்லாவியா ஜனாதிபதி சீனாவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் நாடுகளுடன் சீனா வளர்த்து வரும் நல்லுறவுகளின் பிரதிபலிப்பாக இந்த விஜயம் அமையும்.

கிழக்கு ஜேர்மனி, ஹங்கேரி அதிபர்கள் அண்மைக்காலங்களில் பீகிங் சென்றிருந்தனர். (ஒ)

# அக்கினோவை அகற்றும் சதி முயற்சி தோல்வி

## அமெரிக்கா பின்னணி என தகவல்

மணிலா, ஜன. 27

ஜனாதிபதி அக்கினோவிற்கு எதிராக பிலிப்பீன்ஸ் இராணுவ வீரர்கள் சிலர் மேற்கொண்ட சதி முயற்சி நேற்று முறியடிக்கப்பட்டது.

மணிலாவில் உள்ள சிறிய விமான நிலையம் ஒன்றையும் இருதொலைக்காட்சி நிலையங்களையும் கைப்பற்றிய இராணுவ வீரர்கள் அக்கினோவின் ஆட்சி முடிவுக்கு வருவதாக அறிவித்தனர். தலைநகரில் இராணுவ நடமாட்டமும் அதிகரித்து இருந்தது.

தொலைக்காட்சி நிலையத்தினுள் ஞாயிறு இரவு புகுந்த சுமார் ஆயிரத்திற்கும் அதிகமான இராணுவத்தினர் வழமையான நிகழ்ச்சிகளைத் தடை செய்தனர்.

இச் சம்பவங்களின் போது ஜனாதிபதி அக்கினோவின் பாதுகாப்பு குறித்து சந்தேகம் நிலவிய பொழுதிலும் நேற்று மாலை அவர் தொலைக்காட்சியில் தோன்றி உரையாற்றினார்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் என்ரைலின் ஆதரவாளர்களாக சதி முயற்சியில் ஈடுபட்ட இராணுவத்தினரைச் சந்தேகிக்கப்படுகின்றது.

கிளர்ச்சியாளர்கள் சகலரும் கைது செய்யப்பட்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகவும், என்ரைல் அமெரிக்காவிடமிருந்து இச் செயலுக்காகப் பணம் பெற்றார் என அவர்களில் ஒருவர் தெரிவித்ததாகவும் வெரித்தாஸ் செய்தி வெளியிட்டது (ஒ)

## தனிநாட்டுக்கு ஆதரவாக பொற்கோவிலில் சீக்கியர் கூடினர்

சண்டிகார், ஜன 27

இந்திய குடியரசு தினத்தன்று சுமார் 25 ஆயிரம் சீக்கியர்கள் தனிநாட்டுக் கோரிக்கையை ஆதரித்து அமிர்தசரஸ் பொற்கோவில் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

சீக்கியத் தீவிரவாதிகளின் இரண்டு ஸ்தாபனங்கள் இதனை ஒழுங்கு செய்திருந்தன.

சீக்கியர்கள் ஆட்சி புரியவேண்டும் என்ற கோஷத்துடன் அவர்கள் அங்கு தனிநாட்டுக் கோரிக்கைக்கு அங்கீகாரம் அளித்தார்கள்.

இந்த மத நிகழ்ச்சியின் போது பொற்கோவிலைச் சுற்றி 5 ஆயிரம் ராணுவம் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

இந்த நான்கு மணித்தியால பிரார்த்தனைக் கூட்டத்தில் ஆயுதப் படையினரால் தேடப்பட்டு வரும் பல தீவிரவாதத் தலைவர்களும் கலந்து கொண்டதாக அறிவிக்கப்படுகின்றது. (ஒ)

## டாக்காவில் கவிதை விழா

டாக்கா ஜன, 27

பங்களாதேஷ் ஜனாதிபதி ஹுசெய்ன் முகமட் ஏர்ஷாட் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை டாக்காவில் ஆசிய கவிதை விழாவை ஆரம்பித்து வைப்பார்.

29 நாடுகளைச் சேர்ந்த சிரேஷ்ட கவிஞர்கள் இவ்விழாவில் பங்குபற்றுவார்கள்.

ஜனாதிபதி ஏர்ஷாட்டும் ஒரு கவிஞராவர். (ஒ)

## குழந்தையைக் கட்டிவைக்கும் தாய்லாந்துத் தாய்

பாங்கொக், ஜன 27

தற்பொழுது இரண்டு வயதாகும் தனது பெண் குழந்தையை கடந்த 18 மாத காலமாகக் கட்டிலுடன் கயிற்றினால் வரிந்து கட்டிவிட்டு வேலைக்குச் செல்லும் ஒரு பெண் தாய்லாந்து சமூக நல சேவைப்பிரிவினரிடம் சிக்கியுள்ளார்.

அப்பெண்ணின் ஐந்து வயதுடைய மூத்த புதல்வன் மதியம் வீடு திரும்பியதும் அக்குழந்தையை அவிழ்த்து விடுவாராம்.

அச்சிறு குழந்தையின் குழப்படிதாங்க முடியாமல் போனதினால் அவ்வாறு கட்டிலுடன் கட்டும் நிலை தனக்கு ஏற்பட்டதாக அத்தாய் பொலிஸிடம் தெரிவித்தாள். (ஒ)

**வெளி உலகில்**

## ஓர் அங்குல நிலமும் பாகிஸ்தான் இழக்காது

### பாக். பிரதமர் திடநம்பிக்கை

லண்டன், ஜன. 27

பாகிஸ்தான் தனது பிரதேசத்தில் ஓர் அங்குல நிலத்தைக் கூட இழப்பதற்கு அனுமதிக்காது. பாகிஸ்தானின் ஒவ்வொரு அங்குல நிலமும் பாதுகாக்கப்படும்.

—இப்படி பாகிஸ்தான் பிரதமர் மொகமட் ஜுனஜோ அறிவித்திருக்கிறார்.

ஆயுதப் போரைத் தவிர்ப்பதற்கே பாகிஸ்தான் விரும்புகிறது. இந்தியாவுடன் நட்புறவு பூணவே பாகிஸ்தான் நாட்டம் கொண்டுள்ளது. — இப்படி அவர் சொன்னார்.

இதேவேளை இந்திய–பாகிஸ்தான் எல்லையில் ஏற்பட்டுள்ள பதற்றம் குறித்து பாகிஸ்தானுடன் பேச்சு வார்த்தை நடத்த இந்தியாவும் விருப்பம் தெரிவித்திருக்கிறது.

இந்தியாவின் அழைப்பை ஏற்று பேச்சுக்களை நடத்த பாகிஸ்தான் குழு ஒன்று இந்தியா செல்ல ஆயத்தமாகிவருகிறது (ஒ)

## பங்களாதேஷ் எதிர்க்கட்சியினர் வெளிநடப்பு

டாக்கா, ஜன. 27

பங்களாதேஷ் நாடாளுமன்றம் நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் புதிய கூட்டத் தொடரை நேற்று முன்தினம் ஆரம்பித்தது.

எதிர்க் கட்சி உறுப்பினர்கள் முதற்தடவையாக நாடாளுமன்றத்திற்குச் சமுகமளித்தனர்.

பின்னர் அவர்களில் 106 பேர் வெளிநடப்புச் செய்தனர். (ஒ)

## தாய்லாந்து மலேஷியாவிடம் வேண்டுகோள்

கோலாலம்பூர், ஜன. 27

மலேஷியாவில் தடை செய்யப்பட்டுள்ள மலாயா கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சுமார் இரண்டாயிரம் கெரில்லாக்களுக்கு மன்னிப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு தாய்லாந்து அரசாங்கம் மலேஷியா அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தது.

தாய்லாந்தின் எல்லை பகுதியிலிருந்து கெரில்லாக்கள் வன்செயல்களை மேற்கொண்டு வருவதாக மலேஷியா குற்றம் சாட்டிய பொழுதே தாய்லாந்து இதனைத் தெரிவித்தது. (ஒ)

# இனப்பிரச்சினை: இந்தியாவின் அணுகுமுறையும் நோக்கமும்

### பகை கொள்ளாதிருக்க காரணங்கள் உண்டு

**அ. குமரகுரு (சட்டத்தரணி)**

இந்தியா ஒரு வல்லரசாக இப்போது இல்லாவிட்டாலும் வல்லமை பொருந்தியதாக நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டிருக்கும் ஒரு நாடு. இந்து சமுத்திர பிராந்தியத்தில் செல்வாக்கு மிகுந்த நாடாக அது மிளிர்ந்து வருகிறது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் சுதந்திரம் பெற்ற காலந்தொட்டு ஒன்றோடொன்று ஒட்டி உறவாடாவிட்டாலும் அவை பகைமையற்று இருந்துவந்திருக்கின்றன.

இந்து சமுத்திரத்தில் இலங்கையின் கேந்திர நிலை காரணமாகவும், இரு நாடுகளுக்கும் இடையேயுள்ள நெருங்கிய கலாசார உறவுகள் காரணமாகவும், இந்தியா எக்காலத்திலும் இலங்கையுடன் நல்லுறவையே வைத்துக் கொள்ள முயன்று வந்திருக்கிறது.

மலைநாட்டுத் தமிழர் பிரச்சினை, கச்சதீவுப் பிரச்சினை போன்ற பல பிரச்சினைகள் இருநாடுகளுக்குமிடையே எழுந்த போதெல்லாம் இந்தியா தான் விட்டுக்கொடுத்து வந்திருக்கிறது.

ஆனால் இலங்கை, என்ன காரணமோ, இந்தியாவுடன் பிராந்திய அடிப்படையிலாவது நெருக்கமான உறவை வளர்த்துக்கொள்ளவில்லை.

#### இலங்கைக்கு ஆர்வமில்லை

இந்தியா இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி உதவிகளையும், தொழில் நுட்ப உதவிகளையும் வழங்கக்கூடிய நிலையில் இருந்தும் இலங்கை அவைகளை இந்தியாவிடமிருந்து பெறுவதற்கு ஆர்வம் கொள்ளவுமில்லை.

இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த இரு பெரும் அரசியல் கட்சிகளும் இந்தியாவுடன் நெருக்கமான உறவை வைத்துக்கொள்ள வேண்டிய அவசியத்தை உணரவில்லை.

ஒன்றில் அமெரிக்கா–இங்கிலாந்து போன்ற கூட்டு நாடுகளுடன் நெருங்கிச் சென்றார்கள். அல்லது இடதுசாரிகள் என்ற போர்வையில் சீனாவுடன் ஒட்டி உறவாடினார்கள்.

அதுமாத்திரமல்ல, இந்தியாவுக்கு எல்லைப்புறங்களில் தொல்லை கொடுக்கும் நாடுகளின் விசேட நண்பர்களாகவும் இருந்து வருகிறார்கள்

இந்தியா பொறுமையாக இருந்துகொண்டு இலங்கையை தன்வசப் படுத்த முயன்றிருக்கிறது. ஆனால், இலங்கையோ இந்தியாவின் அரசியல் ஆதிக்கத்தினுள் வீழ்ந்துவிடக் கூடாதென்ற காரணத்தினாலோ அல்லது வேறு காரணத்தினாலோ சற்று விலகியே நின்றுள்ளது.

#### பகை மூளவில்லை

இந்தியா–பாகிஸ்தான் யுத்தத்தின்போது பாகிஸ்தான் விமானங்கள் இங்கே தரையிறங்க அனுமதிக்கப்பட்டபோதுகூட இரு நாடுகளுக்குமிடையே பகை மூளவில்லை.



ஜே. ஆர்

இந்து சமுத்திரத்தில் தனது செல்வாக்கையும் தனி முதன்மையையும் ஏற்றுக் காள்ளாதவகையில் இலங்கை நடந்து கொள்வதும் இப்பிரதேசத்தில் அமெரிக்காவின் மறைமுக ஆதிக்கத்தை வளர்ப்பதற்கு ஆதரவாக இலங்கை இருந்துவருவதும்—இந்தியாவுக்கு தலையிடி தரும் விவகாரங்களாயிருந்தன.

இருந்தும், இந்தியா இலங்கையுடன் வெளிப்படையாகப் பகைத்துக் கொள்ளவில்லை. ஆனால் இங்கு எழுந்த இனப்பிரச்சினையை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டது.

இலங்கைத் தமிழருக்கு இழைக்கப்படும் அநீதிகளை இந்தியா கண்டிக்காமல் இருந்திருக்க முடியாது.

தென் ஆபிரிக்காவின் இன ஒதுக்கலுக்கும் வேறு நாடுகளில் சிறுபான்மையினர் ... பயன்படுத்துவதற்கும், எதிராக அவ்வப்போது குரல் கொடுத்துவரும் இந்தியா அண்டை நாட்டிலுள்ள சிறுபான்மை மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டும் காணாததுபோல் இருக்க இயலாது.

போராளிகளுக்கும், அகதிகளுக்கும் புகலிடம் இந்தியா கொடுத்ததை உலகநாடுகள் நியாயப் படுத்தவே செய்கின்றன

இந்தியாவில் வாழும் ஐந்துகோடி தமிழ் மக்களின் உணர்வுகளை புறக்கணிக்கும் வகையில் இந்தியா நடந்துகொள்ளாது.

ஆனால் இந்தியா இலங்கையில் ஒரு தனித் தமிழ்நாடு பிறப்பதைதான் ஆதரிக்கவில்லையென்று வெளிப்படையாகவே கூறிவருகிறது.

இங்கு ஒருதனிநாடு உருவாகினால் ஒரு காலத்தில் தமிழ்நாடும் தனிநாடு வேண்டுமென்று புரட்சி செய்யக்கூடும் என்ற பயம் புதுடில்லி ஆட்சி பீடத்திலுள்ளவர்களுக்கு இருப்பது இயல்பு

மேலும் இலங்கை இரண்டாகப் பிரிந்தால் இந்து சமுத்திரத்தின் அமைதிக்குப் பங்கம் ஏற்படும்— தென் இலங்கை முழுக்க முழுக்க ஏதாவதொரு வல்லரசின் ஆதிக்கத்துக்குள் தன்னிச்சையாகவே விழுந்து விடக் கூடிய நிலைமை உருவாகலாம் என்று இந்தியா பயப்படக்கூடும்.

எனவே, இந்தியாவுக்குப் பலவிதமான சிக்கல்கள் ஏற்படும் என்று இந்திய ஆட்சியாளர்கள் கருதக்கூடும்.

இலங்கை இராணுவம் அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று வருவதும், தமிழ்ப் பிரதேசங்களை அழித்து வருவதும் இந்தியாவுக்கு ... நிறைவேற்றினாலும்

இலங்கை அரசை அவ்வப்போது எச்சரிக்கை செய்வதற்கு மேல் எதையும் செய்யும் நோக்கம் அதற்கு இல்லை

#### நேரடி நடவடிக்கையை விரும்பாது

இந்தியா இலங்கைக்கு எதிராக நேரடி நடவடிக்கையில் இறங்கினால் எல்லைப்புறத்திலுள்ள இந்தியாவின் விரோத நாடுகள் எல்லைகளில் தொல்லைகளைக் கொடுக்கக் கூடும்.



ராஜீவ் காந்தி

அமெரிக்காவின் மறைமுகத் தூண்டுதலினாலும் இலங்கையுடன் நேசமனப்பான்மை இருப்பதினாலும் — இந்தியாவின் விரோத நாடுகள் யுத்தப் பீதியைக் கிளப்பிவிடத் தயங்க மாட்டா.

தனக்கு நன்மை பயக்காத ஒரு யுத்தத்தில் இறங்க இந்தியா விரும்பாது.

பங்களாதேசுக்குப்படை அனுப்பியதால் இந்தியாவுக்கு அரசியல் லாபம் இல்லையென்று கூற முடியாது.

ஆனால் இங்கு படை அனுப்பினால் ஏற்படக் கூடிய விளைவுகளை இந்தியா நஷ்டக்கணக்கிலேயே பார்க்கிறது போலும்

பிரதமர் ராஜீவ் காந்தி தனக்கு உலகரங்கில் ஒரு அரசியல் நற்பெயரையும் புகழையும் (POLITICAL CHARISMA) தேடிக்கொள்ளவே விரும்புவார்.

அண்டை நாடுகளுடன் நல்லுறவு வைத்துக் கொண்டால்தான் இந்தியாவை பொருளாதார வளம் மிகுந்த நாடாகக் கட்டியெழுப்பலாம் என்ற நம்பிக்கையுடையவர் அவர்.

#### தமிழர்கள் ஏமாற்றப்பட்டால்?

இந்தியா ஒரு வலிமை பொருந்திய நாடாக வளர்ந்து வரும் பொழுது இலங்கை தானாகவே அதன் 'அன்புப் பிணைப்புக்குள்' விழுந்து விடும் என்பது அவருடைய எண்ணமாயிருக்கலாம்.

போராளிகளின் தீரத்தையும் இலட்சியப்பற்றையும் இந்தியா அறியாமல் இல்லை. அவர்களைப் பலவீனப்படுத்தி, விரக்தியடையச் செய்து பேச்சுவார்த்தை மேசைக்கு வர நிர்ப்பந்திக்கிறார்கள்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் இனப்பிரச்சினை இலங்கைக்கு நல்ல பாடம் புகட்டியுள்ளது —இந்தியாவுடன் நல்லுறவை வைத்திருக்கவேண்டிய அவசியத்தை உணர்த்தியுள்ளது என்று இந்தியா திருப்திப்படலாம்.

ஆனால் அதிகாரப்பரவலாக்கல் நாடகத்தினால் தமிழ் மக்கள் மறுபடியும் ஏமாற்றப்பட்டால் அதற்கு இந்தியாவே முழுக்க முழுக்க பொறுப்பாளியாகும்.

**சமய நிகழ்ச்சிகளில்**

## மஹா சிவராத்திரி

கொடிகாமம், ஜன. 28

கொடிகாமம் இராமாவில் கந்தசுவாமி கோவில், சாவகச்சேரி சந்திரசேகர வாரிவனநாதர் சிவன்கோவில், உசன் கந்தசுவாமி கோவில உட்படப் பல கோவில்களில் மஹா சிவராத்திரி தினமான பெப்ரவரி 26 ஆம் திகதி வைபவங்கள் சிறப்பாக நடைபெற உள்ளன. (இ-75)

## அபிராமிபட்டர் விழா

யாழ்ப்பாணம், ஜன. 28

புளியங்கூடல் மஹாமாரியம்பாள் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை அபிராமிபட்டர் விழா நடைபெறவுள்ளது.

விழாவில் தமிழ்மணி வீ. எஸ். கணேசசுந்தரன் அவர்களால் அபிராமி அம்மைப் பதிகம் பாடப்படும். (இ)

## அபிராமி அந்தாதி

யாழ்ப்பாணம், ஜன. 28

தை அமாவாசைத் தினமான நாளை வியாழக்கிழமை சூராவத்தை முத்துமாரியம்மன் கோவிலில் காலை 9 மணிக்கு அம்பாளுக்கு சந்தனக்காப்பு சாத்தப்பட்டு அபிராமி அந்தாதி முற்றும் ஓதப்படும்.

பண்டிதர் கா. நமசிவாயம் விரிவுரை ஆற்றுவார். (இ)

**பொய்யாமொழி**



குறள்

இன்பம் இடைஉறு தீண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின்.

பொருள்:

அவா என்று சொல்லப்படுகின்ற துன்பங்களுள் பொல்லாத துன்பம் கெடுமானால், இவ்வுலகிலும் இன்பம் இடையறாமல் வாய்க்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது!

**ஆர்த்தி ஜுவல்லர்ஸ்**

* தரமான வர்ண நிழற்படப் பிரதிகளை
* கம்பியூட்டர் முறையில்
* குறைந்த செலவில்
* சிறந்த சேவையில்

பெற்றுக்கொள்ளலாம்.



# உதயன்

28 - 01 - 1987 புதன்கிழமை



* வர்ணப் புகைப்படப் பிரதி ஒன்று ரூ. 5/- மட்டுமே!
* ProcessingFree(நெகடிவ்செய்யஇலவசம்)
* வர்ண புகைப்படச் சுருள்கள் விற்பனைக்கு

KODAK — FUJI — KONICA
SAKURA — FORTE — TUDOR

**ஆர்த்தி ஜுவல்லர்ஸ்**
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23628


## வித்தாரம்

கா.... வணக்கங்கள். வரவேணும் முரளித்தம்பி.

என்ன கையில ஒரு சுருள் வைச்சிருக்குறீர்? ஓ! கலண்டரோ! என்னடா அப்பா! வருஷம் பிறந்து ஜனவரி மாதமும் இன்னும் மூன்று நாளில கழியப்போகுது. இன்னும் உந்தக் கலண்டர் பயித்தியம் விடயில்லையே.

வருஷம் பிறக்கிறதுக்கு முன்னம் டிசம்பரிலேயே சிலபேருக்கு உந்தப் பயித்தியம் பிடிச்சிடும். கடை அடிச்சுக்கள இடத்திலை நல்ல கவர்ச்சியான, அழகான கலண்டர்களைப் பறிச்சுப்போடுவினம். ஆனால் பிறகு எங்கே கண்டாலும் முஞ்சினுக்கு என்ன எண்டுதான் எதிர்பார்த்துக் கொண்டிருப்பினம். உது ஒரு 'மெனியாக்' வியாதி எண்டு தான் நினைக்கிறேன்

ஒரு வீட்டுக்கு ஒரு கலண்டர், சரி விடு ஆகக்கூடினது இரண்டு கலண்டர் போதாதே? பத்துப் பதினைஞ்சு எண்டு வேணுமே? ஓசியில கிடைக்குது எண்டதுக்காக அப்பிடி வாங்கி என்ன அடுக்கி வைக்கிறதே?

சரி உனக்குக் கொழும்பில இருந்து நேற்று வந்தவர் தந்ததாய் இருக்கலாம். உந்தக் கலண்டர் விஷயம் உண்மையில ஒரு கவர்ச்சி விஷயம்தான்.

கொழும்பில இருந்து ஆட்கள் வடக்கே கொண்டுவரும் கலண்டர்கள், டயரியளில அரைவாசியை ஆமிக்காரருக்கு வழியில 'தானம்' செய்யவேண்டி இருக்குதாம். சோதனை எண்ட பெயரில நல்ல கலண்டர், டயரிகளைக் கண்டால் அவை பறிக்கொள்ளுகினமாம். என்ன செய்யிறது 'வழியில் தேங்காயை எடுத்து தெருவில் பிள்ளையாருக்கு அடித்த' கதையாய் முடியுது. கொழும்பில இருந்து யாழ்ப்பாணத்துக்கு கலண்டர், டயரி கொண்டு வாறவையின்ரை கதை.

கலண்டர் கதை அதோடை முடிந்துவிட்டதாக நினைக்காதை. கொழும்பு, இலங்கை, கோட்டே ஜெயவர்த்தனபுர பார்லிமெண்டையும் கலண்டர் ஒரு கலக்குக் கலக்கி இருக்குது.

மக்கள் வங்கி, இலங்கை வங்கி கலண்டர்களில் தெற்கில ஒரு தொகுதியில வீடுவீடாக விநியோகிக்கப்பட்டதாக அங்கை ஒரு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது அரசியல் ஆதரவு தேடுவதற்காக அப்பிடிச் செய்யப்பட்டதோ எண்டு சந்தேகம் எழும்பிற தொனியில, கொஞ்சம் சாடுகிற தொனியில அந்தக் குற்றச்சாட்டு இருந்திது.

அந்தக் குற்றச்சாட்டுத் தவறானது எண்டு சிரேஷ்ட மந்திரி ஒருவர் மறுப்புத் தெரிவித்தார் அப்ப இலங்கை வங்கி, மக்கள் வங்கியளின்ரை லாபங்கள், அதுகள் கலண்டர் அடிக்கிறதுக்கு எடுக்கிற வழிமுறைகள் எல்லாம் வெளியில வந்திச்சுது.

இப்ப தெரியுதே கலண்டர் விஷயம் எவ்வளவு பெரிய விவகாரம் எண்டு!

* * *

நீ பேப்பர் ஒழுங்காய் படிக்கிறபடியால இந்த விஷயமும் தெரிஞ்சிருக்க வேணும்

ஐஞ்சாம் வகுப்பு தமிழ் புத்தகத்தில முகமது நபியின்ரை படம் ஏதோ போட்டிருக்கு எண்டு சொல்லி இஞ்சை குடுத்த புத்தகம் எல்லாத்தையும் திருப்பி எடுத்தவை

யாழ்ப்பாணத்துக்கு பாடநூல் முழுசாய் வரையில்லை. பல புத்தகங்கள் வரவேண்டி இருக்குது. வந்ததிலையும் ''தமிழ்-5'' புத்தகத்தை திருப்பி வாங்கி விட்டினம். ஐஞ்சாம் வகுப்புப் பிள்ளையள் இனி என்னெண்டு படிக்கிறது?

கடைசியாகக்கிடைச்ச பிந்திய செய்தி தெரியுமே? பிரச்சினைக்கு உரிய படத்தைக் கிழிச்சுப் போட்டு இஞ்சை புத்தகத்தை திருப்பி அனுப்பப் போகினமாம்! வேறு பல வெளிமாவட்டங்களுக்கு அப்பிடித் தானும் நடந்திருக்குது!!

அரசாங்கத்தைப் போலை அதுகள்ளரை திணைக்களங்களும் நாடகம் ஆடுது பாத்தியே அதுவும் விணாப் பணத்தைச் செலவழிச்சு மாணவரின்ரை படிப்பில மண்ணைத் தூவிக் கொண்டு

சம்பந்தப்பட்ட படத்தைக் கிழிச்சுப் போட்டு பாவிக்கச் சொல்லியிருக்கலாம் தானே! பல மைல் கட்டிக் காவி கொழும்புக்கு எடுப்பிச்சு அங்கைவைச்சே கிழிக்க வேணுமே?

தொண்டேடி


## நீத்தார் பட்டியல்

### திருமதி செல்லத்துரை பாக்கியம்

முல்லைத்தீவைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை பாக்கியம் காலமானார். இவர் செல்லத்துரையின் அன்பு மனைவியும், செ. பாக்கியநாதன் (சக்தி அரிசி ஆலை முல்லைத்தீவு), செ. இரத்தினம், செ. சண்முகநாதன் (சவுதி), செ. உதயகுமார், செ. ராஜகுமார் (குமரன்ஸ் கிறீம் ஹவுஸ் முல்லைத்தீவு), அச்சுவேலி பத்தமேனியைச் சேர்ந்த சி. வசந்தாதேவி, வட்டக்கச்சியைச் சேர்ந்த க. கமலாதேவி, இ. நாகரத்தினம், ஆ. செல்வராணி ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். அன்னாரின் ஈமைக் கிரியைகள் இன்று (28-1-87) காலை 10 மணிக்கு பத்தமேனியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்: இ. ஜெயம்


# குடாநாட்டில் சுகாதாரச் சீர்கேடு

## உள்ளூராட்சி அமைச்சுக்கு ஆணையாளர் கடிதம்

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ் குடாநாட்டுக்கான எரிபொருள் தடை தொடர்ந்தும் நீடிப்பதனால் குடா நாட்டில் சுகாதார சீர்கேடு ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.

யாழ் மாநகர ஆணையாளர் திரு சி. வி கே. சிவஞானம் உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தினமும் யாழ் மாநகர சபைப் பகுதியில் இருந்து 30 லோட்டுக்கும் குறையாத குப்பைகள் அகற்றப்படுவதுண்டு.

தற்பொழுது குடாநாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தடை காரணமாக குப்பைகளை மாநகரசபையால் அகற்ற முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் நகரில் பாரிய சுகாதார சீர்கேடுகளும் ஏற்பட இடமுண்டு என நான் அஞ்சுகிறேன்.

இப்படி அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டுள்ளது (இ-10)

# 3 கட்சிக் கூட்டணி:

## சுதந்திரக் கட்சி முயற்சி

கொழும்பு, ஜன 28

கொழும்பில் புதிதாக துவக்கப்பட்டுள்ள ஸ்ரீ லங்கா மக்கள் ஐக்கியக் கட்சியுடன் சேர்ந்து 3 கட்சிக் கூட்டணி ஒன்றை அமைக்க ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி முயற்சித்து வருவதாகத் தெரிகிறது

மக்கள் ஐக்கிய முன்னணி இக் கூட்டணியில் சேர்க்கப்படவிருக்கும் மூன்றுவது அரசியல் கட்சி ஆகும்

ஸ்ரீ லங்கா மக்கள் ஐக்கியக் கட்சியின் அமைப்பாளர் திரு ருக்மன் சேனநாயக்கா.

அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் பிரமுகர்களான திரு ஏ. ஸி. குணரத்ன, திரு ஸ்ரீ பெரேரா போன்ற பிரமுகர்களும் இக் கட்சியில் அங்கம் வகிக்கின்றனர்.

லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி ஆகியன ஏற்கனவே மூன்று கட்சிக் கூட்டணி ஒன்றை அமைத்து உள்ளது தெரிந்ததே.

தேர்தல் ஒன்று வருமானால் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்வதையே சுதந்திரக் கட்சியின் 3 கட்சிக் கூட்டணி அமைப்பதன் முக்கிய நோக்கம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

## 6 ஆம் ஆண்டு அனுமதி:

# 31 ஆம் திகதி நடக்கும் போட்டிப் பரீட்சைக்கு

## இன்றுமுதல் அனுமதி அட்டை

யாழ்ப்பாணம், ஜன 28

யாழ் இந்துக்கல்லூரி, யாழ் இந்துமகளிர் கல்லூரி, யாழ் வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் 6 ஆம் ஆண்டுக்கு (5 ஆம் வகுப்பு) மாணவர்களை அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 31 ஆம் திகதி அந்தந்தப் பாடசாலைகளில் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

இப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை அந்தந்தப் பாடசாலைகளில் இன்றுமுதல் நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது (இ-உ)

## மக்கள் வங்கி..:

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

கது.

மக்கள் வங்கி ஊழியர்கள் விடுத்த அறிக்கை வருமாறு;

மக்கள் வங்கி ஊழியர்களுக்கும் மக்கள் வங்கியில் அடகு வைத்தோர் சங்கத்துக்கும் இடையே 26. 1 87 திகதியில் நடந்த கூட்டம் பற்றிய செய்தி 27. 1 87 உதயனில் வெளிவந்தது

இப்பொழுது நடைபெறும் போராட்டமும் கோரிக்கைகளும் நியாயமானவை என்றும் யாழ் செயலகத்தின் முன் மறியல் போராட்டம் நடத்துவதாக மக்கள் வங்கி ஊழியர்கள் இணங்கியதாகவும் செய்தியில் வெளியிடப் பட்டுள்ளது.

போராட்டமும் கோரிக்கைகளும் நியாயமானவை என்று சொல்லவோ, யாழ் செயலகம் முன் போராட்டம் நடத்தவோ தீர்மானம் எதுவும் நிறைவேற்றவில்லை. அங்ஙனம் நிறைவேற்றும் அதிகாரம் எமக்கு இல்லை மேற்படி செய்தியை ஊழியர்களாகிய நாம் மறுக்கிறோம்-

இப்படி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

# விளம்பரத்தில் ஒன்று உள்ளே மற்றொன்று

## சில மினி சினிமாக்காரர் தில்லுமுல்லு குறித்து ஆணையாளர்

யாழ்ப்பாணம் ஜன. 28

சில மினி சினிமாக்களின் வெளியே வைக்கப்பட்டிருக்கும் விளம்பரப்பலகையில் உள்ள காட்சிகள் உள்ளே காண்பிக்கப்படும் திரையில் வருவதில்லை. இப்படியான மினி சினிமாக்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ் மாநகர ஆணையாளர் திரு சி வி கே. சிவஞானம் எமது செய்தியாளரிடம் இவ்வாறு தெரிவித்தார்.

பல மினி சினிமாக்களின் வெளியே விளம்பரத்தட்டிகளில் ஆபாசப் படங்களை ஒட்டி மக்களின் உணர்வுகளைத் தூண்டி உள்ளே இழுக்கிறார்கள்.

உள்ளே காட்டப்படும் படங்களின் வெளியே உள்ள படங்களுடன் எவ்விதத் தொடர்பும் இராது.

இதுபற்றிப் பலர் தம்மிடம் முறையிட்டுள்ளதால் கடும்நடவடிக்கை மேற்கொள்ள மாநகர சபை தீர்மானித்துள்ளது என்றும் ஆணையாளர் தெரிவித்தார்.

# கட்டுத்துவக்கு வெடித்து சிறுவன் பலி

யாழ்ப்பாணம், ஜன. 28

கச்சான் தோட்டத்துக்கு காவலுக்கு சென்ற சிறுவன் கட்டுத்துவக்குக்கு பலியானார்.

முல்லைத்தீவு ஆலம்பில் பகுதியை சேர்ந்த சற்குணம் சதீஸ்வரன் (14 வயது) என்பவரே இறந்தவர் ஆவார்

கடந்த 24ஆம் திகதி கட்டுத்துவக்கு தாக்கியதில் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டிருந்த இவர் திங்கள் காலமானார். (இ-10)

## ஹர்த்தால் குறித்து

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 28

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இடம்பெறவிருக்கும் ஹர்த்தால் சம்பந்தமான ஒழுங்குகளை மேற்கொள்ளுவது பற்றிய கலந்துரையாடல் இன்று புதன் பிற்பகல் 2 மணிக்கு யாழ் வை. எம். சி ஏ மண்டபத்தில் நடைபெறும்.

அரச, தனியார் கல்லூரிகள், ஆஸ்பத்திரி, வர்த்தக நிலையங்கள், வங்கிகள் மற்றும் போக்குவரத்துச் சேவை, பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் இக் கலந்துரையாடலில் பங்குபற்றுவர். (உ-எ)

# கொக்குவிலில் நாளை சுகாதார கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன 28

யாழ் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படுகின்ற சுகாதாரக் கல்வி, முதலுதவி வகுப்புக்களைக் கொண்ட ஐந்து நாள் கருத்தரங்கு நாளை 29ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகின்றது.

வளர்ந்தோர் கல்வி அதிகாரியும் வடபிராந்திய சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை ஆணையாளருமான திரு. சி. எஸ். சுப்பிரமணியம் இதனைத் தெரிவித்தார்

ஜி சி ஈ உயர்தர வகுப்பு மாணவ மாணவிகளுக்காக இக் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன.

இராமநாதன் கல்லூரி, யாழ் ஆங்கில திருக்குடும்ப கன்னியர் மடம் என்பனவற்றில் இக் கருத்தரங்குகள் ஏற்கனவே நடைபெற்றுள்ளன. (இ-5)

# பிரதமர் பிரேமாவின் 8 அம்ச பிரதிக்ஞை

கொழும்பு, ஜன. 28

* இலங்கைக்கு எதிரான வெளிநாட்டு எதிரிகளுக்கு இரையாக மாட்டேன்.

* நாட்டின் ஒற்றுமையை அழிக்க உதவும் உள் நாட்டுத் துரோகிகளுக்கும் இரையாகமாட்டேன்.

மேற்கண்டவாறு எதிர்வரும் சுதந்திர தினம் அன்று முன்கண்ட பிரதிக்ஞையை ஒவ்வொருவரும் எடுக்க வேண்டும்.

பிரதமர் திரு. ஆர். பிரேமதாச இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

8 அம்ச பிரதிக்ஞையில் தெரிவிக்கப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் வருமாறு:

* இன பேதத்தை விதைக்கும் முயற்சியைத் தோற்கடிப்பேன்,

* இறைச்சி சாப்பிடமாட்டேன்

* மது, மற்றும் போதைப் பொருள்கள் பாவிக்கமாட்டேன்.

* புகைத்தல், சூதாட்டம் ஆகியவற்றில் ஈடுபடமாட்டேன்

* ஏழைகளுக்கு உதவுவேன்,

* மக்களின் பொருளாதார ஆத்மீக மேம்பாட்டுக்கு உழைப்பேன்.

## ஆரம்ப....

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

ரோர்கள் கூட்டம் ஒன்றில் மேற்கண்ட கோரிக்கையைக் கல்வித் திணைக்களத்துக்கு விடுப்பது என்று தீர்மானிக்கப் பட்டது.

கோரிக்கை குறித்து கல்விப் பணிப்பாளரை நேரில் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவது என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது

அதற்கான குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. குழு உறுப்பினர்கள் வருமாறு:-

திருவாளர்கள்: செ கோடீஸ்வரன் (சட்டத்தரணி), சிவகுரு (பயிர் காப்புறுதி திணைக்கள பிராந்திய இயக்குநர்), மகேந்திரநாதன், அப்புத்துரை, நா. சின்னத்துரை.

தேவை ஏற்படும் போது கல்விமான்களையும் குழுவில் சேர்த்துக் கொள்ள கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது. (இ-எ)

## போராளிகளின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களை ஆற்றிக் கொண்டிருந்த இரண்டு பேரும் அந்த இடத்திலேயே சுருண்டு விழுந்து உயிரிழந்தனர். ஏனைய நால்வரும் மாட்டுவண்டியையும் கைவிட்டு தப்பினோம் பிழைத்தோம் என்று காட்டுப் பாதையால் ஓடினர்.

-இப்படி மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கொலைச்சம்பவம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

சாட்சியான மேற்படி நால்வரும் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களை வாங்கியதாகக் கூறப்படும் கே. பி. தர்மதாஸ என்ற நபரும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஐவரும் மூதூர் பதில் நீதிவான் திரு. செல்வராசாவின் உத்தரவின் பேரில்விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். (உ-எ-150)

## பேச்சுக்களை மீண்டும் தொடர

# கூட்டணியின் 4 நிபந்தனைகள்

சென்னை, ஜன. 27

● வடபகுதி மீதான பொருளாதார முற்றுகை நீக்கப்பட வேண்டும்.

● கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும்.

● வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள ஆயுத படை முகாம்கள் மூடப்படவேண்டும்.

● சிறை வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் விடுதலை செய்யப்படவேண்டும்.

மேற்கண்ட அம்சங்களை நிறைவேற்றுவதன் மூலம்தான், பேச்சுக்களில் தனக்குள்ள மனப்பூர்வமான விருப்பத்தை இலங்கை அரசு வெளிக்காட்ட வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் முன்கண்டவாறு சென்னையில் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் பயிற்சி பெற்ற அதிரடிப்படையினர் மட்டக்களப்பில் கடந்த சனிக்கிழமை நடத்திய வெறித்தாக்குதல்கள், பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்க்கத் தடையாக உள்ளன என்றும் திரு அமிர்தலிங்கம் தெரிவித்தார். (இ-எ)

## கர்நாடக மாநிலத்தில் தங்கம்

பெங்களூர், ஜன. 28

கர்நாடக மாநிலத்தில் பண்டாலி வட்டாரத்தில் தங்கப் படிவங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

பாரத புவியியல் ஆய்வுகளில் இது தெரிய வந்திருக்கிறது. (இ-எ)

### பிறந்தநாள் வாழ்த்து

அல்வாய் தெற்கு தவனேஸ்வரன் தர்மசிறி தம்பதியின் புதல்வன் சுபாஷ் இன்று தனது ஆறுவது பிறந்த தினத்தை கொண்டாடுகின்றார்.


# V.J.S. EXPRESS

## யாழ். - கொழும்பு - யாழ். பருத்தித்துறை - கொழும்பு- பருத்தித்துறை

அநேக பிரயாணிகளின் வேண்டுகோளுக்கிணங்க எமது மற்றுமோர் புதிய சேவை:

## 01-02-1987 முதல்

பருத்தித்துறை, மந்திகை, நெல்லியடி, கொடிகாமம் ஊடாக கொழும்புக்கு மற்றுமோர் புதிய சௌகரியமான சேவையொன்றை ஆரம்பிக்கவுள்ளோம்.

## ஒரு வழிக் கட்டணம்: 160|-

புறப்படும் நேரம்:

| | |
|---|---|
| பருத்தித்துறை | காலை 7-00 மணி |
| மந்திகை | காலை 7-15 மணி |
| நெல்லியடி | காலை 7-30 மணி |

யாழ்ப்பாணம்-
சிறிமகள் ஸ்ரோர்ஸ்: காலை 7-30 மணி

ஆசனப் பதிவு செய்யுமிடங்கள்:

1. பருத்தித்துறை: சந்தை, பஸ் நிலையம் என்பவற்றிற்கு அருகாமையில் 28-1-87 முதல் எமது ஆசனப் பதிவு செய்யும் காரியாலயம் இயங்கும்.
2. மந்திகை: இலங்கை வங்கி முன்பாக எமது ஆசனப் பதிவு செய்யும் காரியாலயம் இயங்கும்.
3. நெல்லியடி: பொன்னம்பலம் புத்தகசாலை

யாழ்ப்பாணம்:

1. சிறிமகள் றேடர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23572
2. 113. பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24204

கொழும்பில் ஆசனப் பதிவு செய்யுமிடங்கள்:

1. அசோகா லாட்ஜ் 169, செட்டியார் தெரு, கொழும்பு.
2. நியூ ஹை ஸ்டார் 246 காலி வீதி, கொழும்பு. தொலைபேசி: 500767
3. ராம்ஜி லொட்ஜ், 361, காலி வீதி, பம்பலப்பிட்டி, தொலைபேசி: 501543

காரியாலயம்:
113, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24204

தலைமைக் காரியாலயம்:
41, விவேகானந்த ரோட், கொழும்பு-6. தொலைபேசி: 500748



இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 28 - 01 - 1987 தொலைபேசி இல. 24805, 22078

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ. 60 N 86. Telephone. 24805, 22078.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org